# வீட்டுவசதி பலன் மாறியிருக்கிறது ஓர் தனியார் நில உரிமையாளரிடமிருந்து நீங்கள் வீட்டை வாடகைக்கு எடுத்திருக்கும் பட்சத்தில்

| நீங்களோ அல்லது உங்கள் வீட்டாரோ... | நிகழவிருக்கும் மாற்றம் | இது நடைபெறும் தேதி |
|---|---|---|
| ...25-35 வயதுடையவராகவும், திருமணமாகாமல் நீங்களே தனியாக வாழ்பவராக இருந்தால் | உங்கள் வீட்டுவசதி பலன் என்பது, பகிர்ந்து கொள்கிற வீட்டிலுள்ள ஒரு அறையை வாடைக்கு எடுக்கும் அளவிற்கு மட்டுமே கொடுக்கப்படலாம் என்பதால், அது குறைக்கப்படலாம் | **2012 ஜனவரியிலிருந்து.** விதிவிலக்குகள் உள்ளன என்பதை தயவுசெய்து குறித்துக் கொண்டு, தயவுசெய்து ஆலோசனையை நாடுங்கள். |
| ...முதல் முறையாக அல்லது புதிய கோரிக்கையை செய்கிற பட்சத்தில், அல்லது உங்களது தற்போதைய கோரிக்கை மறுஆய்வு செய்யப்படுகிற பட்சத்தில் | உங்கள் பகுதிக்கான சந்தை வாடகையின் மிகக் குறைந்த மூன்றில் ஒரு பாகத்திற்குள்ளான அளவுகளுக்குள்ளான அதிகபட்ச அளவிற்கு மட்டுமே உங்கள் வீட்டு வசதிப் பலன் கொடுக்கப்பட முடியும், என்பதால் நீங்களே கொடுப்பதற்கான வாடகையில் உங்களுக்கு குறைப்பு இருக்கலாம் | **2011 ஏப்ரலிலிருந்து.** ஏற்கெனவே உள்ள கோரிக்கைகளுக்கு: உங்கள் வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கையில் மாற்றமிராத பட்சத்தில், நீங்கள் கோரிக்கை செய்து ஒருவருடமாகி, அதன் பின் 9 மாதங்களுக்குப் பிறகு. |
| ...செலவு அதிகம் பிடிக்கிற ஒரு சொத்தை வாடகைக்கு எடுத்து, அதிக வாடகை செலுத்தினால் (உ.ம். ஓர் அதிக செலவு பிடிக்கிற பகுதியில் ஓர் தனியார் நில உரிமையாளரிடமிருந்து வாடகைக்கு எடுத்தல்) | பின்வரும் ஒவ்வொரு சொத்து அளவின் அதிகபட்ச அளவிற்கு மட்டுமே நீங்கள் வீட்டு வசதி பலனைப் பெற்றுக் கொள்ளலாம்:<br>■ 1 படுக்கையறைக்கு வாரத்திற்கு £250<br>■ 2 படுக்கையறைகளுக்கு வாரத்திற்கு £290<br>■ 3 படுக்கையறைகளுக்கு வாரத்திற்கு £340<br>■ 4 படுக்கையறைகள் அல்லது 4 படுக்கையறைகளுக்கு மேலுள்ள எந்தவொரு சொத்திற்கும் வாரத்திற்கு £400 | **2011 ஏப்ரலிலிருந்து.** ஏற்கெனவே உள்ள கோரிக்கைகளுக்கு: உங்கள் வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கையில் மாற்றமிராத பட்சத்தில், நீங்கள் கோரிக்கை செய்து ஒருவருடமாகி, அதன் பின் 9 மாதங்களுக்குப் பிறகு. |
| ...தற்போது ஓர் 5-படுக்கையறை சொத்தில் வசித்து உள்ளூர் வீட்டுவசதி படி விகிதத்தை பெறுகிற பட்சத்தில் | உங்கள் பகுதியில் உள்ள ஓர் 4-படுக்கையறை சொத்திற்கான அதிகபட்சத்தை - அதிக செலவு பிடிக்கிற பகுதியில் ஓர் உச்சகட்ட வரம்பான வாரத்திற்கு £400 என்பதோடு-மட்டுமே நீங்கள் கோர முடியும் | **2011 ஏப்ரலிலிருந்து.** ஏற்கெனவே உள்ள கோரிக்கைகளுக்கு: உங்கள் வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கையில் மாற்றமிராத பட்சத்தில், நீங்கள் கோரிக்கை செய்து ஒருவருடமாகி, அதன் பின் 9 மாதங்களுக்குப் பிறகு. |
| ...கொடுக்கக் கூடிய வாடகைக்கு மேல் உங்கள் வீட்டு வசதிப் பலனின் மிகுதியான தொகையை நீங்கள் பெற்று வருகிற பட்சத்தில் (வாரத்திற்கு அதிகபட்சமாக £15 வரை) | மிகுதியான தொகை எதுவும் இருக்காது என்பதால், நீங்கள் இதனை அதற்கு மேல் பெற்றுக் கொள்ள மாட்டீர்கள் | **2011 ஏப்ரலிலிருந்து.** ஏற்கெனவே உள்ள கோரிக்கைகளுக்கு: உங்கள் வீட்டாரின் எண்ணிக்கையில் மாற்றமிருந்தால், உங்கள் வருடாந்திர மறுஆய்வுத் தேதியில், அல்லது அதற்கு முன். |
| ...ஊனமடைந்திருந்து, உங்களைக் கவனித்துக் கொள்பவர் இரவு தங்குவதற்காக ஓர் கூடுதல் அறை அவசியமானால் | இதற்கு வசதி செய்து கொடுப்பதற்காக வேறு எங்கேனும் ஒரு கூடுதல் அறையை பிடிப்பதற்கான செலவை சேர்த்துக் கொள்வதற்காக (வீட்டாரின் எண்ணிக்கைக்கு ஏற்ப), நீங்கள் வீட்டு வசதிப் பலனைப் பெற்றுக் கொள்ள இயலும் | **2011 ஏப்ரலிலிருந்து.** புதிய அல்லது ஏற்கெனவே உள்ள கோரிக்கைகளுக்கு உடனடியாக அமலுக்கு வருகிறது. |

Registered charity in England and Wales (263710) and in Scotland (SC002327). RH4317. Tamil

தகவல்கள் மற்றும் சேவைக்கான பயனுள்ள ஸ்தாபனங்கள்:

**Shelter**
0808 800 4444 or
shelter.org.uk/advice

**Citizens Advice Bureaux**
08444 111 444
adviceguide.org.uk

**Community Legal Advice**
0845 345 4 345
communitylegaladvice.org.uk

**Money Advice Service**
0300 500 5000
moneyadviceservice.org.uk

Shelter